Vol. 11 Special Issue 1 August 2023

P-ISSN: 2321 - 788X E-ISSN: 2582 - 0397

SHANLAX JOURNALS

editor@shanlaxjournals.com | www.shanlaxjournals.com

A Peer-Reviewed-Refereed-Scholarly Indexed Quarterly Journal

ஹோலிகிராஸ் ஹோம் சயின்ஸ் கல்லூரி, தூத்துக்குடி

மற்றும்

சான்லாக்ஸ் பன்னாட்டு ஆய்விதழ்

இணைந்து நடத்தும்

பன்னாட்டுக் கருத்தரங்கம்

# இலக்கியங்கள் காட்டும் பெண் நிலைப்பாடு

# Certificate OF PUBLICATION

We hereby certify that

முனைவர் இரா. பொன்னி

In recognition of the Publication of the Paper Entitled

புறநானூறு காட்டும் மனைமாட்சி

Published in

SHANLAX INTERNATIONAL JOURNAL OF ARTS, SCIENCE AND HUMANITIES

முனைவர் மி. ஜோஸ்பின் ரேணுகா

அருட். சகோதரி. எம். எஸ். ரூபா
முதல்வர்

முனைவர் ஞா. அந்தோணி சுரேஷ்

Dr. N. Ayyanathan
Editor in Chief

Er. S. Lakshmanan
The Publisher

Scanned with ACE Scanner

12 அற இலக்கியங்களில் பெண்களின் நிலை 63
முனைவர் செ. சரவணப்பெருமாள்

13 சங்ககாலப் பெண்களின் நிலை 67
முனைவர் இரா. தெய்வநாதன்

14 வைரமுத்து நாவல்களில் பெண்ணிய உளவியல் 72
மு. கேசவமூர்த்தி & முனைவர் சி.ஆர். கிளாடிஸ் லீமா ரோஸ்

15 புறநானூறு காட்டும் மனைமாட்சி 76
முனைவர் இரா. பொன்னி

16 ஐங்குறு நூறு "தலைவி இரங்கு பத்து" உணர்த்தும் உரையாடல் வழி தலைவியின் உணர்வு வெளிப்பாடு 80
முனைவர் நா. சிவகுரு

17 Kinship as a Key to Keeping Traditions Alive 86
Dr. C. Justin Selvaraj

18 கல்மரம் நாவல் உணர்த்தும் பெண்ணியச் சிந்தனைகள் 92
முனைவர் வ. மாலிக் பாதுசா

19 பெரியபுராணத்தில் பெண் நாயன்மார்களின் சிறப்புகள் 97
முனைவர் ஆ. உஷா

20 சல்மாவின் பால்யம் சிறுகதைத் தொகுப்பில் இஸ்லாமிய பெண் வாழ்வு 101
முனைவர் கா. மைதீன்

21 கருவாச்சி காவியத்தில் பெண் வார்ப்பும் வடிவமைப்பும் 107
திருமதி அ. ரூபாதேவி

22 இந்தியா இதழ்த் தலையங்கத்தில் சமூக வெளிப்பாடு 112
முனைவர் சு.பா. பாலமுருகன்

23 ஆற்றுப்படைகளில் விருந்தோம்பல் 118
செ. கிரிஜா & முனைவர் செ. சாந்தி

24 ஔவையாரின் நற்றிணைப் பாடல் திறன் 122
முனைவர் ப.சு. செல்வமீனா

Scanned with ACE Scanner

# புறநானூறு காட்டும் மனைமாட்சி

முனைவர் இரா. பொன்
உதவிப் பேராசிரியர், பாத்திமா கல்லூரி, மதுரை

மலர்: 11

சிறப்பிதழ்: 1

மாதம்: ஆகஸ்ட்

வருடம்: 2023

P-ISSN: 2321-788X

E-ISSN: 2582-0397

DOI: https://doi.org/10.5281/zenodo.8233264

சங்க இலக்கியங்கள் அகத்தில் காதலையும் புறத்தில் வீரத்தையும் பாடுபொருளாகக் கொண்டது. அவற்றுள் தமிழர்களின் வரலாற்றுப் பெட்டகம், வாழ்வியற் களஞ்சியம் என்றெல்லாம் புகழ்பெறுவது புறநானூறு. கல்வியறிவு நிரம்பப் பெற்றிராத சங்க காலத்திலும் 32 க்கும் மேற்பட்ட பெண்பாற் புலவர்கள் இருந்துள்ளனர். இவர்கள் மன்னருக்கு அறிவுரை கூறி, நல்வழி நடத்தும் தூதராய், தன்மானம் மிக்க புலவராய், அறிவுத்துணையாய் விளங்கும் சான்றோர்களாய் இருந்துள்ளனர். புறநானூறு வீரம் செறிந்த ஆண்மைச் சமுதாயத்தை, சான்றாண்மைகளைச் சுட்டிக் காட்டினாலும் பெண்களின் செறிவான இல்லறப் பண்பை எடுத்துக் காட்டுவதையும் தவறவில்லை.

மனைக்கு விளக்கம் மடவாள் என்பர். இருளை அகற்றி மனைக்கு வெளிச்சம் தருவது விளக்கு. அதே போன்று இல்லறம் சிறப்புற்று விளங்க அடிநாதமாக விளங்குபவள் பெண். பெண்ணின்றி இவ்வுலகில் ஓர் அணுவும் அசையாது. மனைக்கு விளக்காகிய வாணுதல் பெண்ணே (புறம் : 314) என்று இல்லற வாழ்க்கைக்குப் பெண்ணே ஒளி விளக்கு ஐயூர் முடவனாரும் பாடியுள்ளார்.

மனைமாட்சி இல்லாள்கண் இல்லாயின் வாழ்க்கை எனைமாட்சித் தாயினும் இல் (குறள் 52) எனும் குறட்பாவில் நல்ல குணமும் செயல்பாடுகளும் இல்லாளிடம் இல்லாது போனால் இல்லறம் சிறக்காது என்று வள்ளுவனாரும் கூறிச்செல்கின்றார்.

## விருந்து படைப்பிலும் பரிசிலிலும்

பரிசில் வழங்குதலில், விருந்தோம்புதலில், மன்னர்களும் வள்ளல்களுமே சிறப்புற்று விளங்கினர் என்பதற்கு பல புறப்பாடல்கள் சான்றாக அமைகின்றன. ஆனால் புறநானூற்றில் கூறப்படும் விதை நெல்லை உணவாக்கிப் படைத்திட்ட இல்லாளின் மாண்பு இவை எல்லாவற்றையும் புறந்தள்ளிவிட்டது. விதை நெல்லையும் உணவாக்கி படைத்திட்ட நல்லாள் இல்லக்கிழத்தியானவள் உரலில் தினையைக் குற்றிக் கொண்டே புலவர்களே! இங்குத் தங்கிச் செல்லுங்கள். இல்லத்தில் இருந்த வரகு, தினை ஆகியவற்றை இல்லை என்று கேட்டு வந்தவர்களுக்கு உணவாகவும், கொடையாகவும் கொடுத்துத் தீர்ந்துவிட்டன. இனி குறிவெதிர்ப்புப் (கடன் பெறுதல்) பெறவும் வழியில்லை. விதைக்காகக் கதிரோடு காயவைத்துப் பாதுகாக்கப்பட்ட தினை உள்ளது. தேர் வல்லார் வரினும், ஓடை அணிந்த யானை மேல் வரும் வேந்தர் ஆயினும் உண்பது இந்தத் தினைதான்

உங்களுக்கும் அதனைப் பரிசாகவும் வழங்குகிறேன். மேன்மக்களே ஏற்றுக்கொள்ளுங்கள் - எனப் படையலிட்டு மகிழ்வாள்.

**.. மனையோள் விரும்பி,**
**வரகும் தினையும் உள்ளவை எல்லாம்**
**இரவல் மாக்கள் உணக்கொளத் தீர்ந்தென,**
**குறித்து மாறு எதிர்ப்பை பெறாஅமையின்,**
**குரல் உணங்கு விதைத் தினை உரல் வாய்ப் பெய்து,**
**சிறிது புறப்பட்டன்றோ இலளே;**

**(புறம் : 333)**

என்ற வரிகள் இதனைத் தெள்ளிதின் விளக்கும்.

இன்னொரு கிழத்தியோ, முதுகுடிப் பெண் நடுகல்லைத் தெய்வமாகக் கை தொழுது விருந்தினர்கள் என் இல்லத்துக்கு வரவேண்டும். என் கணவனுக்கும், வேந்தனுக்கும் நாடு விரிவாக்கும் பகைவனோடு போர் வரவேண்டும் என்று வருகிறாள்.

**நடுகல் கை தொழுது பரவும், ஒடியாது;**
**விருந்து எதிர் பெறுகதில் யானே; என்னையும்**
**ஒ ... ... ... ... ... ... ...வேந்தனொடு**
**நாடுதரு விழுப் பகை எய்துக எனவே.**

**(புற : 306)**

என விருந்தோம்புதலை இல்லறக் கடமையாகவே ஆற்றி வருகிறாள். தன் கணவனொடு சேர்ந்து பாணர்க்கும் பரிசிலர்க்கும் ஓயாது உணவளித்துக் கை ஓயாதவளான இல்லாளைச் சிறப்பிக்கும்

**புறநானூற்று வரிகள்**
**மனையோள்**
**பாணர் ஆர்த்தவும் பரிசிலர் ஓம்பவும்**
**ஊனொலி அரவமொடு கைதூவாளே**
**பரிசில் பரிசிலர்க்கு ஈய**
**உரவேற் காளையும் கை தூவானே.**

**(புறம் :334)**

"அரசர் கண்டீரக்கோ வெளியில் சென்றிருந்தால் பரிசில் நாடி வரும் புலவர்களுக்கு, இல்லப் பெண்கள் இருக்கும் பெண் யானைக்கு அணிகலன்கள் பூட்டி பரிசாகக் கொடுப்பார்களாம். கணவனைக் கேட்டுத் தான் பரிசில் வழங்க வேண்டும் என்றில்லாது, கணவன் குறிப்பறிந்து செயல்படும் பெண்களே மனை மாட்சிமை பெற்றுத் திகழ்வாள் பெருந்தலைச்சாத்தனார் என்று புகழ்கிறார்.

கிழவன் சேட்புலம் படரின், இழை அணிந்து, புந்தலை மடப்பிடி பரிசிலாகப்,
**பெண்டிரும் தம்பதம் கொடுக்கும் வண்புகழ்க்**
**கண்டீரக்கோன். (புறம் : 151)**

**மாமியின் மனமறிந்த பண்புடையாள்**

இன்றைக்குப் புகுந்த வீட்டிற்குச் செல்லும் பெண்களுள் 90 சதவீதம் பேருக்கு மாமியாரின் இணக்கமான உறவு கிடைப்பதில்லை. அதற்கு இருவருமே காரணகர்த்தா ஆகின்றனர் என்றே கூற வேண்டும். இல்லறத்தில் ஒற்றுமை இல்லாத சூழலை உருவாக்கவும் இது வழிகோலுகிறது. சங்க காலத்தில், இன்னன் ஆயினன் இளையோன் என்று

**நின்னுரை செல்லும் ஆயின், மற்று**
**முன்னூர்ப் பழுனிய கோளி ஆலத்துப்**
**புள்ளார் யாணர்த் தற்றே என்மகன்**
**வளனும் செம்மலும் எமக்கென நாளும்**
**ஆனாது புகழும் அன்னை**
**யாங்கா குவள்கொல்? அளியள் தானே.**

**(புறம் : 254)**

போர்க்களத்தில் விழுப்புண் பெற்று இறந்து கிடந்த கணவனை நோக்கிய பெண், உனது மார்பு நிலத்தில் படுமாறு, நீ இடைவழியில் இறந்துவிட்டாய். வீரனே!, நீ இறந்துவிட்டாய் என்று உன்னைப் பற்றிய செய்தியை நான் உன் தாயாரிடத்து எடுத்துச் சென்றால், 'என் மகனின் செல்வமும் புகழும், ஊரின் முன்னே உள்ள, பழுத்த ஆலமரத்தில் பறவைகள் வருவதைப் போன்றது' என்று நாள்தோறும் விடாமல் புகழ்ந்து பேசும் உன் தாய் எவ்வாறு தாங்குவாளோ? என்று மனமிரங்குகிறாள்.

தன் கணவனை இழந்த பெண், தான் வருந்துவது மட்டுமல்லாமல், தன் கணவனின் தாயார் வருத்தத்தையும் தாய்மை நோக்கோடு



Scanned with ACE Scanner

எண்ணுவது, அவளின் பாராட்டத்தக்க உயர்ந்த நற்குடிப்பண்பைக் காட்டுகிறது. கைம்மைத் துயரிலும் தாய்ப்பாசம் கொண்டவள்.

போரில் கணவனை இழந்த பெண் ஒருத்தி கைம்மை நோன்புக்கு ஆட்படுகிறாள். அவள் கூந்தல் கொய்யப்பட்டு, வளை நீக்கப்படுகிறது. சிறிதளவு உணவை அல்லி இலையில் போட்டு அரை வயிறு உண்கிறாள். இத்தருணத்தில் தன் தந்தை வேண்டுமென்று அடம்பிடிக்கிறான் பாலருந்தும் சிறுவன். தண்ணீரைப் பருகி பசித்தீராததால் தாயின் தீம்பால கேட்டு அழுகிறான். ஆக கணவன் இறந்துபட்டாலும், தான் கைம்மைத் துயருற்றாலும் அவள் உண்பது உயிர் வாழ்வது எல்லாம் தன் புதல்வனுக்காக எனத் தன்னை உணர்ந்தவளாக மிளிர்கிறாள் இத்தாய்.

**கூந்தல் கொய்து, குறுந் தொடி நீக்கி,**
**அல்லி உணவின் மனைவியொடு, இனியே**
**புல்லென்றனையால் வளம் கெழு திரு நகர்!**
**வான் சோறு கொண்டு தீம் பால் வேண்டும்**
**முனித்தலைப் புதல்வர் தந்தை தனித்**
**தலைப் பெருங் காடு முன்னிய பின்னே.**

**(புறம் : 250)**

இவ்வுணர்ச்சிகரமான வரிகளைத் தாயங்கண்ணியார் எனும் புலவர் பாடியுள்ளார்.

விழுப்புண் பெற்ற நேரத்திலும் கணவனுக்குத் துணை நின்றவள் பிறந்த பெண்ணொருத்தி போரில் விழுப்புண் பெற்ற தன் கணவனின் புண்ணைக் கிருமிகள் அணுகாமல் இருக்கவும், பேய்கள் அவற்றைத் தீண்டாமல் இருக்கவும், மாந்தழை, வேப்பந்தழைகளை வீட்டில் செருகி, யாழ் இசைக் கருவிகளை முழக்கவும் செய்கிறாள். ஐயவி என்னும் வெண்சிறு கடுகு எண்ணெயைப் புண்ணில் தடவுகிறாள். வலி தெரியாமல் இருக்க ஆம்பல் பண் கொண்டும் தூங்க காஞ்சிப்பண்ணால் குழலும் இசை விக்கிறாள். பல்வேறு பாதுகாப்பு ஏற்பாடு களைச் செய்கின்றாள்.

**தீம் கனி இரவமொடு வேம்பு மனைச்**
**செரீஇ, வாங்கு மருப்பு யாழொடு பல்**
**இயம் கறங்க, கை பயப் பெயர்த்து மை**
**இழுது இழுகி, ஐயவி சிதறி, ஆம்பல்**
**ஊதி, இசை மணி எறிந்து, காஞ்சி பாடி,**

**(புறம்.281:1-7)**

இவ்வாறாக கணவன் போரில் பெற்ற விழுப்புண்களைப் பாதுகாப்பதற்கும் ஆற்றுவதற்கும் தயாராக இருக்கும் பெண்களின் மனத்துணிச்சலும் ஒத்துழைப்பும் ஆண்களைத் தொடர்ச்சியாகப் போருக்கு அனுப்பி வைத்துள்ளது எனலாம். மகளிரின் இத்தகைய கவனிப்பு முறை ஆண்களை எப்பொழுதும் ஒரு வீரனாக பரிணமிக்கத் துணை செய்திருக்கின்றது என்பதற்கு மேற்கூறிய பாடல்வரிகளே சான்றுகள்.

பூ விற்கும் பெண்ணிற்காக மனமிரங்கியவள் பெண்பாலிடத்து இரக்க குணம் இயல்பாகவே குடி கொண்டிருக்கும். ஐயா மறுப்பினும் அம்மா மறுத்திடாள். ஒருபிடி அன்னமோ உப்பிட்ட கஞ்சியோ ஐயமிட்டு உண்பதே அருந்தமிழ்ப் பெண்மை என்று நாமக்கல் கவிஞர் தமிழன் இல்லறம் சிறப்புடையதாய் அமைவதற்கு பெண்ணின் மனமே முதற்காரணம் என்பார்.

**நாண்உடை மாக்கட்கு இரங்கும் ஆயின்**
**எம்மினும் பேர்எழில் இழந்து**
**வினைஎனப்பிறர்மனை புகுவள் கொல்லோ?**
**அளியள் தானே பூவிலைப் பெண்டே!**

**(புறம் 293)**

தன் கணவன் போருக்குச் சென்றால் திரும்பி வரும்வரை பெண்கள் தங்களை அலங்கரித்து கொள்ள மாட்டார்கள். தலையில் பூச்சூட மாட்டார்கள். அப்பொழுது பூ விற்பதற்காக வந்த பெண்ணைப் பார்த்து, பார்ப்பனர், நோய்வாய்ப்பட்டோர், ஆண்பிள்ளைகள் இல்லாதோர் ஆகிய ஒரு சில ஆண்கள் மட்டுமே போருக்குச் செல்லமாட்டார்கள். அத்தகையவர்கள் இருக்குமிடத்திற்குச் சென்றுதான் பூ விற்க வேண்டும். ஆனால், அத்தகையவர் வெகு சிலரே. எவ்வாறு இவளால் பூவை விற் முடியும் என்று பூ விற்கும்பெண்ணுக்காக மனமிரங்குகிறாள் இல்லாள் என்று புலவர் குறிப்பிடுகிறார்.



Scanned with ACE Scanner

ஈரநெஞ்சம் கொண்ட இல்லத்தரசியாள் எல்லா உயிர்களிடத்தும் கருணைப் பார்வை கொண்டு நோக்குபவள் பெண். ஈரநெஞ்சம் கொண்ட மனத்தவளான ஒரு பெண் மனிதர்கள் மட்டுமில்லாது எல்லா உயிர்களிடத்தும் பரிவு காட்டுகிறாள். மனையோள் ஒருத்தி தன் வீட்டின் முன் மரநிழலில் அயர்வால் உறங்கும் கணவனைப் பார்க்கிறாள். உறக்கம் கலையக்கூடாது என எண்ணுகிறாள். இன்னொரு புறம் இரு மான்கள் இன்ப வேட்கையில் திளைக்கின்றன. கலையும் பிணையும் பிரியக்கூடாது என எண்ணி ஒலி இல்லாமல் அமைதி காத்தாள். தான் எழுந்து நடமாடவும் இல்லை. அப்பொழுது பறவைகள் ``கல்'' என ஒலி எழுப்பிக்கொண்டு வந்து அவள் மான்தோலில் காயவைத்திருந்த தினை அரிசியைத் உண்டு தீர்த்துவிட்டன. அடுத்து சமைப்பதற்கு ஒன்றுமில்லை. இச்சூழலிலும் மனையாள் ஈரநெஞ்சம் கொண்டு நடக்கும் தன்மையுடையவளாய் மிளிர்கிறாள் இல்லாள். கைம்மான் வேட்டுவன் கனை துயில் மடிந்தென, பார்வை மடப் பிணை தழீஇ, பிறிது ஓர் தீர் தொழில் தனிக் கலை திளைத்து விளையாட, இன்புறு புணர்நிலை கண்ட மனையோள் கணவன் எழுதலும் அஞ்சி, கலையே பிணைவயின் தீர்தலும் அஞ்சி, யாவதும், இல் வழங்காமையின், கல்லென ஒலித்து, மான் அதள் பெய்த உணங்கு தினை வல்சி கானக்கோழியோடு இதல்கவர்ந்து உண்டென, (புறம்:320) இப்பாடல் வரிகள் இதனைப் படம்பிடித்துக் காட்டுகின்றன. இவ்வாறாக சங்க காலத்தில் வினையே ஆடவர்க்கு உயிரே, வாள்நுதல் மனையுறை மகளிர்க்கு ஆடவர் உயிர் என்ற குறுந்தொகை வரிகளுக்கு ஏற்ப பெண்கள் இல்லத்தில் தம் உயிரான ஆடவருக்காக வாழ்ந்தாலும் இல்லறக் கடமைகளிலிருந்து மாறாத தகைமையுடையவர்களாக விளங்கினர். சிறந்த இல்லக்கிழத்தியாக, விருந்தோம்பலில் வள்ளியாக, போர்மேற் சென்ற கணவன் விழுப்புண் பெற்றால் கவனிக்கும் தாயாக, பிறருக்காக மனமிரங்கும் மனத்தவளாக, அனைத்து உயிரிடத்தும் தாய்மை உணர்வு கொண்டவளாக போன்ற பல நற்பண்புகள் பெற்றவர்களாக இருந்துள்ளனர். அதனால்தான் ஆடவர்கள்தங்கள்கடமைகளிலிருந்து விலகாது பணியாற்ற முடிந்தது. குடும்பத்தின் வேராக விளங்கும் பெண் நற்குணங்களாக அமைந்தால் மட்டுமே குடும்பம் சீர்பெறும். சமுதாயமும் சீருடன் திகழும்.